பறவை இனங்கள் இழப்பு ஏற்பட்டால், இதுவரை பறவைக்கு 30 ரூபாய் என்ற அளவில் இருந்த இழப்பீட்டுத் தொகை, இனி பறவைக்கு 100 ரூபாய் என்ற அளவில் உயர்த்தி வழங்கப்படும்.

முற்பகல் 10-05

வன விலங்குகளால் உடைமைகளுக்கு இழப்பு ஏற்பட்டால், உண்மையான இழப்பின் அளவு அல்லது 100 ரூபாய், இவற்றில் எது அதிகமோ, அந்தத் தொகை இழப்பீட்டுத் தொகையாக இதுவரை வழங்கப்பட்டது. இனி, வன விலங்குகளால் உடைமைகள் இழப்பு ஏற்பட்டால், 2,000 ரூபாய் வரை இழப்பீடு வழங்கப்படும் என்பதை மனநிறைவுடன் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

3. அறிவிப்பு

பல்கலைக்கழகங்களின் ஆட்சிமன்றப் பேரவை, ஆட்சிக் குழு, நிர்வாகக் குழு மற்றும் கல்விக் குழுவிற்கு உறுப்பினர்கள் தேர்வு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவைக்கு ஓர் அறிவிப்பு. பின்வரும் பல்கலைக்கழகங்களின் ஆட்சிமன்றப் பேரவை, ஆட்சிக் குழு, நிர்வாகக் குழு மற்றும் கல்விக் குழு ஆகியவற்றில் அலுவல் சார்பற்ற உறுப்பினர்களாகப் பணிபுரிய, மாண்புமிகு உறுப்பினர்களிடமிருந்து முறையாக வேட்பு மனுக்கள் வரப்பெற்றுள்ளன.

சென்னை பல்கலைக்கழகம் (ஆட்சிமன்றப் பேரவை)	திரு. வி.பி. கலைராஜன் திருமதி ஆர். ராஜலட்சுமி திரு. பு. வெற்றிவேல் திரு. து. முருகேசன் திரு. டி.ஆர்.பி. ராஜா திரு. அ. சவுந்தரராசன்
தமிழ்நாடு டாக்டர் எம்.ஜி.ஆர். மருத்துவப் பல்கலைக்கழகம் (ஆட்சிமன்றப் பேரவை)	டாக்டர் ச. சுந்தரராஜ் டாக்டர் சி. விஜயபாஸ்கர்
அண்ணாமலைப் பல்கலைக்கழகம் (ஆட்சிமன்றப் பேரவை)	திரு. இரா. இராஜேந்திரன் திரு. வி. முத்துக்குமார் திரு. க. பாலகிருஷ்ணன்

2011 ஆகஸ்ட் 17] [பேரவைத் தலைவர்]

அழகப்பா பல்கலைக்கழகம் (ஆட்சிமன்றப் பேரவை)	திரு. ம. குணசேகரன்
பாரதியார் பல்கலைக்கழகம் (ஆட்சிமன்றப் பேரவை)	திரு. செ. தாமோதரன் திரு. எம். ஆறுமுகம்
பாரதிதாசன் பல்கலைக்கழகம் (ஆட்சிமன்றப் பேரவை)	திரு. ஆர். மனோகரன் திரு. எஸ். செந்தில்குமார்
மதுரை காமராசர் பல்கலைக்கழகம் (ஆட்சிமன்றப் பேரவை)	திரு. தங்க. தமிழ்ச்செல்வன் திரு. கே.டி. ராஜேந்திர பாலாஜி திரு. சி. மைக்கேல் ராயப்பன் திரு. நா. இராமகிருஷ்ணன்
மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகம் (ஆட்சிமன்றப் பேரவை)	திரு. கடம்பூர் ராஜு திரு. ஜே.ஜி. பிரின்ஸ்
தமிழ்ப் பல்கலைக்கழகம் (ஆட்சிமன்றப் பேரவை)	திரு. இரா. காமராஜ் திரு. எம். ரெங்கசாமி
பெரியார் பல்கலைக்கழகம் (ஆட்சிமன்றப் பேரவை)	திரு. சி. கிருஷ்ணன் திரு. ந. நஞ்சப்பன்
அண்ணா பல்கலைக்கழகம் (ஆட்சிக் குழு)	திரு. ஜே.சி.டி. பிரபாகர்
தமிழ்நாடு ஆசிரியர் கல்வியியல் பல்கலைக்கழகம் (ஆட்சிக் குழு)	திரு. கே.பி. அன்பழகன்
தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகம் (நிர்வாகக் குழு)	திரு. எம்.கே. அசோக்
தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழகம் (நிர்வாகக் குழு)	திரு. எம்.கே. முத்து கருப்பண்ணசாமி
திருவள்ளுவர் பல்கலைக்கழகம் (கல்விக் குழு)	திரு. கே.சி. வீரமணி திரு. டி. செங்குட்டுவன்

தேர்ந்தெடுக்கப்பெறவேண்டிய உறுப்பினர்களின் எண்ணிக்கையும், முறையாக வரப்பெற்றுள்ள வேட்பு மனுக்களின் எண்ணிக்கையும் சமமாக இருப்பதால், வேட்பு மனு அளித்த மாண்புமிகு

உறுப்பினர்கள் அனைவரும் அந்தப் பதவிகளுக்கு முறையாகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

சென்னைப் பல்கலைக்கழகம் மற்றும் மதுரை காமராசர் பல்கலைக்கழக ஆட்சிமன்றப் பேரவைகளுக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள உறுப்பினர்களின் பதவிக் காலம் 10-1-2013 வரை ஆகும். அண்ணாமலைப் பல்கலைக்கழக ஆட்சிமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள உறுப்பினர்களின் பதவிக் காலம் 5-12-2013 வரை ஆகும். பிற பல்கலைக்கழகங்களின் ஆட்சிமன்றப் பேரவை, ஆட்சிக் குழு, நிர்வாகக் குழு மற்றும் கல்விக் குழு ஆகியவற்றிற்குத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள உறுப்பினர்களின் பதவிக் காலம் இன்றிலிருந்து (17-8-2011) மூன்றாண்டுக் காலம், அதாவது, 16-8-2014 வரை ஆகும். தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள உறுப்பினர் ஏதாவதொரு காரணத்திற்காகப் பேரவை உறுப்பினர் பதவியை இழக்க நேரிட்டால், அந்நாளோடு அவருடைய உறுப்பினர் பதவியும் முடிவுடையும்.

4. விதி 110-ன்கீழ் மாண்புமிகு முதலமைச்சர் அளித்த அறிக்கைக்கு நன்றி தெரிவித்தல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: 2011-2012 ஆம் ஆண்டிற்கான மானியக் கோரிக்கைகள்மீது விவாதமும் வாக்கெடுப்பும். 16-8-2011 ஆம் நாளன்று முன்மொழியப்பெற்ற மானியக் கோரிக்கை (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர் முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா அவர்கள்.

***முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மனிதன்-விலங்கு மோதல் (Man-Animal Conflict) தமிழகத்திலே மிக மோசமான நிலையிலே இருந்து வரக்கூடிய ஒரு சூழலிலே, அதனுடைய விபரீதங்களையெல்லாம் கருத்தில் எடுத்துக்கொண்டு, சிறப்பான ஆட்சியைத் தந்து கொண்டிருக்கக்கூடிய மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் (மேசையைத் தட்டும் ஒலி) இதில் பாதிக்கப்படக்கூடிய மனிதர்களுக்கு மட்டுமல்ல; விலங்கினங்களுக்கு மட்டுமல்ல; பறவைகளுக்குக்கூட சிறப்பான முறையிலே ஒரு இழப்பீட்டை அறிவித்திருப்பதை மனிதநேய மக்கள் கட்சியின் சார்பாக மனமார வரவேற்கிறேன்; நன்றி தெரிவிக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)